




நல்லவே எண்ணல் வேண்டும்...

எண்ணிய முடிதல் வேண்டும்...

# சக்கர வியூகம்

தினசரி நாளிதழ் "தேமதுரத் தமிழோசை உலகமெலாம்" DAILY NEWS PAPER

★SAKKRA VIYUGAM★

இணையத்தில் வாசிக்க..,

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 96 | 01.10.2025 | WEDNESDAY | PURATTASI : 15 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 96 | 01.10.2025 | புதன்கிழமை | புரட்டாசி : 15 | விலை : ரூ.5/-



3 திருச்சி மாநகராட்சிக்கு 50 கோடி ரூபாய் வரி பாக்கி 57 கடைகளுக்கு சீல்

4 கரூர் உயிரிழப்பு சம்பவம்: எம்.ஆர்.விஜயபாஸ்கர் எழுப்பும் சந்தேகங்கள்

2 IRCTC ஆன்லைன் டிக்கெட் முன்பதிவு விதியில் மாற்றம் - அக்.1 முதல் 15 நிமிடங்களில் டிக்கெட் வாங்க Aadhaar அவசியம்


# கரூர் தவெக கூட்டத்தில் நெரிசலுக்கு முன் நடந்தது என்ன? தமிழக அரசு தரப்பு புதிய விளக்கம்

சென்னை: அக்.1-

தவெக தலைவர் விஜய்யின் கரூர் பிரச்சாரக் கூட்டத்தில் நடந்தது என்ன என்பது தொடர்பாக தமிழக அரசுத் தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. அமுதா ஐஏஎஸ், பொறுப்பு டிஜிபி வெங்கடராமன், சட்டம் ஒழுங்கு ஏடிஜிபி டேவிட்சன் தேவாசிர்வாதம், சுகாதாரத் துறைச் செயலாளர் உள்ளிட்டோர் கூட்டாக சில வீடியோ காட்சிகளுடன் விளக்கமளித்தனர்.

கரூர் வேலுசாமிபுரத்தில் செப்.27ம் தேதி நடைபெற்ற தவெக பிரச்சாரக் கூட்டத்தில் நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். 110 பேர் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் தொடர்பாக தவெகவினர் 10 பேர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது. கரூர் மேற்கு மாவட்ட தவெக செயலாளர் விபி மதியழகன் மற்றும் தவெக தொண்டரான பவுன்ராஜ் ஆகியோர் கைது செய்யப்பட்டு 15 நாட்கள் நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதற்கிடையில், இன்று மதியம் 3 மணியளவில் தவெக தலைவர் விஜய் எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்த வீடியோவில், உயிரிழந்தவர்களுக்கு இரங்கல் தெரிவித்ததோடு, கரூருக்கு நேரில் வருவேன் என்றார். மேலும், இந்தச் சம்பவத்தில் தன்னைப் பழிவாங்க வேண்டுமென்றால், தன்னை என்ன வேண்டுமானாலும் செய்யலாம், தனது கட்சித் தொண்டர்களை ஏதும் செய்ய வேண்டாம் என்று தமிழக முதல்வருக்கு வெளிப்படையாக சவால் விட்டார். மேலும், முன்பைவிட வலுவாக அரசியல் பயணம் தொடரும் என்றும் தெரிவித்தார்.

இந்த வீடியோ வெளியான சில மணி நேரங்களில் தமிழக அரசு தரப்பில் அமுதா ஐஏஎஸ் உள்ளிட்ட அதிகாரிகள் விளக்கம் அளித்தனர். அப்போது



அவர்கள் கூறியது: "கரூர் பிரச்சாரத்துக்கு விஜய்யின் தவெக தரப்பிலிருந்து 7 இடங்கள் சுட்டிக்காட்டப்பட்டன. அவர்கள் கேட்ட இடங்களில் ஒன்றின் அருகே கால்வாய் மற்றும் பெட்ரோல் பங்க் இருந்தது. அதனாலேயே அந்த இடம் ஒதுக்கப்படவில்லை. அவர்கள் கேட்ட இடங்களில் வேலுச்சாமிபுரமும் இருந்தது. அதைத்தான் நாங்கள் ஒதுக்கினோம்.

மேலும், அவர்கள் கொடுத்த கோரிக்கை மனுவிலேயே 10 ஆயிரம் பேர் தான் வருவார்கள் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், நாங்களாகவே கூடுதல் நபர்கள் வரலாம் என்பதால் வேலுசாமிபுரத்தை ஒதுக்கினோம். காவல் துறை பாதுகாப்பை பொறுத்தவரை 50 பேருக்கு 1 போலீஸ் என்பதுதான் பொதுக்கூட்ட பந்தோபஸ்து விதி. 10,000 பேருக்கு 500 போலீஸார் காவல் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். கூட்டத்தில் போலீஸார் தடியடி நடத்தினர் என்பது தவறு. தவெக தலைவரின் வாகனம் வரும்போது, ஆம்புலன்ஸ் வரும்போதெல்லாம் கூட்டத்தை போலீஸார் விலக்கிவிட்டனர்.

கூட்டம் நடந்தபோது மின்சாரம் துண்டிக்கப்படவில்லை. அதற்கான வீடியோ சான்றுகளும் உள்ளன. கூட்ட நெரிசல் அதிகமாகும்போது தவெகவினர் அமைத்திருந்த ஜெனரேட்டர் அறைக்குள் கூட்டம் புகவே அங்கு ஜென் செட் நிறுத்தப்பட்டுள்ளது. மற்ற இடங்களில் மின் விநியோகம் இருப்பதை வீடியோவில் தெளிவாகத் தெரிகிறது. கூட்டம் நடப்பதற்கு முன்னதாகவே அப்பகுதியில் தலைவர் பேசும்போது பாதுகாப்பு காரணங்களுக்காக மின் தடை செய்ய கோரிக்கை வைக்கப்பட்டது. ஆனால், மின் தடை செய்ய வாய்ப்பில்லை என்று மின்வாரியம் நிராகரித்துவிட்டது என்பதையும் அரசுத் தரப்பில் ஏற்கெனவே விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

ஆம்புலன்ஸ் வாகனங்கள் வேண்டுமென்றே கூட்டத்துக்குள் சென்றதாகக் கூறப்படுவதும் தவறு. விஜய்யின் வாகனத்தோடு 2 ஆம்புலன்ஸ்கள் வந்தன. தவெக தரப்பில் சில ஆம்புலன்ஸ்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. அரசுத் தரப்பிலும் 5 ஆம்புலன்ஸ் வாகனங்கள் நிறுத்தப்பட்டிருந்தன. மக்களுக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டதாக முதல் தகவல் வந்தபின்னரே ஆம்புலன்ஸ் வாகனங்கள் கூட்டத்துக்குள் சென்றன" என்றனர். இவ்வாறு கூட்டம் நடந்த இடம் ஒதுக்கீடு தொடங்கி ஆம்புலன்ஸ் வாகனம், தடியடி, மின்சார தடை சர்ச்சை வரை அனைத்துக்கும் அரசுத் தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

## சின்னாளபட்டி சிறப்புநிலை பேரூராட்சி மன்றக் கூட்டம் தலைவர் பிரதீபா தலைமையில் நடைபெற்றது

சின்னாளபட்டி, செப்30

சின்னாளபட்டி சிறப்புநிலை பேரூராட்சி மன்றக் கூட்டம் தலைவர் பிரதீபா தலைமையில் நடைபெற்றது. அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் சொந்த செலவில் செய்யும் நலத்திட்ட பணிகளுக்கு வார்டு உறுப்பினர்கள்; பாராட்டு தெரிவித்தனர்.

சின்னாளபட்டி பேரூராட்சி மன்ற சாதாரண கூட்டம் பேரூராட்சி அலுவலகத்தில் உள்ள பேரூராட்சி மன்ற தலைவர் அறையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு பேரூராட்சி மன்றத்தலைவர் பிரதீபா கனகராஜ் தலைமை தாங்கினார். துணைத்தலைவர் ஆனந்தி பாரதிராஜா முன்னிலை வகித்தார். சுகாதார அலுவலர் மணிகண்டன் வரவேற்று பேசினார்.

அலுவலக பணியாளர் கலைச்செல்வி தீர்மான நகலை வாசித்தார். 17வது வார்டு திமுக உறுப்பினர் தாமரைச்செல்வி பேசும்போது சின்னாளபட்டி பிரிவிலிருந்து கஸ்தூரிபா மருத்துவமனை மற்றும் அருகே உள்ள பேக்கரி பகுதிகளில் மாலை நேரங்களில் போக்குவத்து இடையூறு ஏற்படுகிறது. மேற்படி சாலையில் போடப்படும் கடைகளை முறைப்படுத்த வேண்டும் என கோரிக்கை விடுத்தார். அதற்கு பதில் அளித்து பேசிய சுகாதார அலுவலர் மணிகண்டன் சாலை ஓரக் கடைகளால் போக்குவரத்து இடையூறு ஏற்படுவது மட்டுமின்றி எங்களால் சாலைகளில் குப்பைகளை அப்புறப்படுத்த முடியாத நிலை உள்ளது என்றார். அதன்பின்னர் பேசிய 4வது வார்டு உறுப்பினர் எம்.ஆர். எஸ்.ஜெயகிருஷ்ணன், எனது வார்டுக்கு உட்பட்ட கோட்டை மந்தை மைதானத்தில் உள்ள நாடக மேடையில் வருவாய் துறை அமைச்சராக ஐ.பெரியசாமி இருந்தபோது பொறிக்கப்பட்ட எழுத்துக்கள் விழுந்து தொங்குகின்றன. அமைச்சர் பெயரை புதுப்பித்து தரவேண்டும் என்றார். அதற்கு பதில்அளித்து பேசிய பேரூராட்சி மன்ற தலைவர் பிரதீபா கனகராஜ் நிதிபற்றாக்குறை உள்ளது ஒப்பந்தக்காரர்கள் பணம் கொடுத்தால்தான் வேலை செய்கிறார்கள். நாடகமேடைக்கு வர்ணம் பூசவேண்டும் என்றார். அப்போது பேசிய 4வது வார்டு உறுப்பினர் ஜெயகிருஷ்ணன் நிதி பற்றாக்குறை என்றால் நாங்கள் கவுன்சிலர்கள் தலா ஆயிரம் ரூபாய்; கொடுக்கிறோம். நாடக மேடையை புதுப்பித்துக் கொடுங்கள் என்றார். அப்போது பேசிய தலைவர் பிரதீபா வார்டு உறுப்பினர்கள் யாரும் பணம் கொடுக்க வேண்டாம் பேரூராட்சி நிர்வாகம் சார்பாகவே நாங்கள் நாடகமேடையை சீர்செய்து தருகிறோம் என்றார். அதன் பின்னர் பேசிய வார்டு உறுப்பினர்கள் ராஜசேகர், மற்றும் ஹேமா எங்கள் பகுதியில் உள்ள தரைப்பாலத்தை சீரமைத்து கொடுங்கள் என கோரிக்கை விடுத்தனர். அதனைத் தொடர்ந்து கூட்டத்தில் பேசிய வார்டு உறுப்பினர்கள் அனைவரும் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களின் சொந்த நிதியில் நலத்திட்ட பணிகள் நடைபெற்று வருகிறது. ஒப்பந்தகாரர்கள் முறையாக செய்வதில்லை. இதனால் பணம் வீணாகும் நிலை உள்ளது. பேரூராட்சி நிர்வாகம் ஒப்பந்தப் பணிகளை தரமான முறையில் செய்ய பணிகளை கண்காணிக்க வேண்டும் தரமில்லாத பணிகளால் அமைச்சர் சொந்தநிதியில் செலவு செய்தும் அவருக்கு அவப் பெயர் ஏற்படும் நிலை உள்ளது என்றனர். நிறைவாக பேரூராட்சி சுகாதார அலுவலர் மணிகண்டன் பேசும்போது ஒட்டுமொத்த வார்டு உறுப்பினர்கள் கோரிக்கையை ஏற்று சின்னாளபட்டி பிரிவிலிருந்து மேட்டுபட்டி வரை உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற நெடுஞ்சாலை துறை நிர்வாகத்திற்கு கடிதம் அனுப்புகிறேன். அதனைத் தொடர்ந்து நாம் பேரூராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுப்போம் என்றார். கூட்டத்தில் பிறப்பு, இறப்பு தீர்மானம் முதல் ஒப்பந்தம் பணிகள் தீர்மானம் வரவு செலவு தீர்மானம் உட்பட 14 தீர்மானங்கள் வாசிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. கூட்டத்தில் கூட்டத்தில் திமுக வார்டு உறுப்பினர்கள் செல்வக்குமாரி, சங்கரேஸ்வரி, வேல்விழி, ஹேமா, தாமரைச்செல்வி, காமாட்சி, சாந்தி, ராஜாத்தி, ராசு, ரவிக்குமார், சுப்ரமணி, ராஜசேகர், அமுல்ராஜ், செல்வி லெட்சுமி குமரக்கண்ணன், உட்பட அனைத்து வார்டு உறுப்பினர்கள், கலந்த கொண்டனர். நிறைவாக அலுவலக பணியாளர் கலைச்செல்வி நன்றி கூறினார்.



## திருச்சி காட்டூரில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுறவு வங்கி கிளை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி இன்று திறந்து வைத்தார்

திருச்சி, அக்.01

திருச்சி காட்டூர் ராஜப்பா நகரில் பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று கூட்டுறவு வங்கி கிளையை தமிழக பள்ளிகல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி புதிதாக தொடங்கி வைத்து, 92 பேருக்கு ஒரு கோடியை 62 லட்சம் மதிப்பிலான கடன் உதவிகளை வழங்கினார்.

தமிழகத்தில் கூட்டுறவு வங்கிகள் கடந்த 1912 ஆண்டு ஏப்ரல் மாதம் 8ந்தேதி முதல் 113 வருடமாக மக்களுக்கு சேவை செய்து வருகிறது.

இந்த வங்கிகள் தொடர்ந்து லாபத்தில் இயங்கி வந்தும் உறுப்பினர்களுக்கு பல்வேறு நலத் திட்டங்கள் மூலம் வைப்புகள் பெறப்பட்டும் கடன்கள் வழங்கப்பட்டு வருகிறது.

2025 நிதியாண்டில் இவ்வங்கிகளில் 19 ஆயிரத்து 200 உறுப்பினர்களை கொண்டும் ரூ. 46 கோடி வைப்புகளை ஈட்டியும் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

மேலும் இந்த கூட்டுறவு வங்கிகள் மூலம்

நகைக்கடன், வீடு அடமானக்கடன், பணியாளர் கடன், வைப்புக் கடன், வீடு கட்டும் கடன், சிறு வணிகக் கடன், பணிபுரியும் மகளிர் கடன், மகளிர் சுயஉதவிக் குழு கடன், கூட்டுபொறுப்பு குழு கடன் மாற்றுத்திறனாளிகள் கடன், தேசிய சேமிப்பு பத்திக்கடன், தாட்கோ , காம்போ, டெப் சிட்கோ போன்ற கடன்கள் வழங்கப்படுகிறது.

இந்த நிலையில

திருச்சி காட்டூர் பகுதி பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் தங்கள் பகுதியில் கூட்டுறவு வங்கி அமைக்க வேண்டும் என நீண்ட நாட்களாக தமிழக பள்ளி கல்வித்துறை அமைச்சர்அன்பில் மகேஷ் பொய்யாமொழியிடம் கோரிக்கை வைத்தனர்.

அதனைத் தொடர்ந்து அன்பில் மகேஸ் பொய்யாமொழி கூட்டுறவு துறை அமைச்சர் பெரிய கருப்பனிடம் கோரிக்கை வைத்தார்.

அதனைத் தொடர்ந்து புதிதாக திருச்சி காட்டூர் ராஜப்பா நகரில் இருதயபுரம் கூட்டுறவு வங்கியை தமிழக பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி திறந்து வைத்தார்.

இந்த வங்கியின் புதிய கிளையில் காட்டூர் ராஜப்பா நகரில்

பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி 20 நபர்களுக்கு சிறுவணிகக் கடனும் மற்றும் வீடு அடமானக் கடனும் ரூ.133.75 லட்சம், மேலும் 5 குழுக்களை சேர்ந்த 58 நபர்களுக்கு ரூ.29 லட்சம் கடன் என மொத்தமாக 92 நபர்களுக்கு ரூ.1.62 கோடி கடன் வழங்கப்பட்டது.

மேலும் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி முன்னிலையில் ரூ 600 உறுப்பினர் சேர்க்கை கட்டணம் செலுத்தி 50 நபர்கள் தங்களை இவ்வங்கியில் உறுப்பினர்களாக சேர்ந்துக் கொண்டு ரூ.27 இலட்சம் வைப்புகள் செலுத்தியுள்ளனர்.

திருச்சி மாவட்டத்தில் கூட்டுறவுத் துறையின் கீழ் 289 கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருகிறது.

இச்சங்கங்கள் வழியாக 01.04.2025 முதல் தற்போது வரை ரூ.1402.44 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

இதில் பயிர் கடனாக 21ஆயிரத்து663 நபர்களுக்கு 206.21 கோடியும், கால்நடை பராமரிப்பு கடனாக 8 ஆயிரத்து 862 நபர்களுக்கு 42.45 கோடியும் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

திருவெறும்பூர் தொகுதியில் 10 தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருகிறது.

இச்சங்கங்கள் மூலம் 01.04.2025 முதல் நாளது தேதி வரை 272 நபர்களுக்கு 151.03 இலட்சம் பயிர் கடன் வழங்கப்பட்டுள்ளது.

இந்த விழாவில் திருச்சி கலெக்டர் சரவணன், திருச்சி மாநகராட்சி மண்டலம் 3 ன் தலைவர் மதிவாணன், கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணை பதிவாளர் ஜெயராமன், சரக துணை பதிவாளர் முத்தமிழ் செல்வி, கூட்டுறவு சார்பதிவு பதிவாளர் அறிவழகன், செயலாளர் சுமித்ரா, வங்கி பொது மேலாளர் ஜென்சி மாமன்ற உறுப்பினர்கள் நீலமேகம், கார்த்திக் மற்றும் கட்சி நிர்வாகிகளும் அரசு அலுவலர்களும் கலந்து கொண்டனர்.





■ குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் அமைச்சர் தா.மோ. அன்பரசன், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆகியோர் மதுரை மாவட்டம், சத்திரப்பட்டி, அழகர்கோவில் ரோடு கிரெசன்ட் கல்லூரியில், வாழ்வாதார தொழில் காப்பகத்தை துவக்கி வைத்தார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் .ஆ.வெங்கடேசன் ஆகியோர் உடன் உள்ளனர்.




## பிரதம மந்திரி சூரிய சக்தி மின் திட்டத்தில் சோலார் மேற்கூரைக்கு மானியம், வங்கிகள் மூலம் கடன் பெறுவது குறித்து விழிப்புணர்வு முகாம்

திருப்பூர், அக்.01-

தமிழ் தமிழ்நாடு மின் பகிர்மானம் கழகம் திருப்பூர் மின் பகிர்மான வட்டம் அவிநாசி கோட்டம் சார்பில் பதிவு பெற்ற சோலார் வெண்டார்ஸ் மற்றும் வங்கி அலுவலர்கள் பங்குபெறும் மின் நுகர்வோர்களுக்கான விழிப்புணர்வு மற்றும் முகாம் திருமுருகன் பூண்டி அருகே உள்ள தனியார் மண்டபத்தில் நடைபெற்றது.

அதில் பிரதம மந்திரி சூரிய வீடு இலவச மின்சார திட்டம் எவ்வாறு பயன்படுத்துவது குறித்தும், மத்திய அரசு மானியத்தில் 1kw கிலோ வாட் 30 ஆயிரம், 2kw கிலோ வாட் 60 ஆயிரம், 3kw கிலோ வாட் 78 ஆயிரம் வீடுகளுக்கான பிரதம மந்திரி சூரிய சக்தி மின் திட்டத்தில் சோலார் மேற்கூரைக்கு மானியம் வழங்கப்படுவது குறித்தும், சோலார் மின் திட்டத்திற்கு வங்கிகள் மூலம் கடன் பெறுவது குறிக்கும் நுகர்வோருக்கு விழிப் புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இதில் நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

## முதலில் கேட்ட இடத்தில் பெட்ரோல் பங்க், கால்வாய் உள்ளது: அமுதா ஐஏஎஸ்

சென்னை, அக்.01-

த.வெ.க.வினர் முதலில் கேட்ட இடத்தில் அமராவதி ஆற்றுப் பாலமும், பெட்ரோல் பங்க்கும் உள்ளது என அமுதா ஐஏஎஸ் தெரிவித்துள்ளார். முதலில் அனுமதி கோரிய லைட் அவுஸ் ரவுண்டானா பகுதியில் பெட்ரோல் பங்க், ஆறு அருகில் இருந்தது. இரண்டாவதாக உழவர் சந்தை பகுதி மிகக் குறுகிய இடம் என்பதால் 5,000 பேர் மட்டுமே திரள முடியும். 10,000 பேர் பங்கேற்பார்கள் என அனுமதி கேட்டிருந்தனர் த.வெ.க.வினர். 25ம் தேதியே வேலுச்சாமிபுரம் ஒதுக்கீடு செய்வதாகக் கூறியபோது அதனை த.வெ.கவினர் ஏற்றுக் கொண்டனர். 2 நாட்களுக்கு முன் எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி கூட்டம் நடத்திய அதே வேலுச்சாமிபுரம்தான் விஜய் கூட்டத்துக்கு ஒதுக்கப்பட்டது. 10,000 பேர் கேட்டதால் 20,000 பேர் வருவார்கள் எனக் கருதி பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டது. வேலுச்சாமிபுரத்தில் வழக்கத்தைவிட கூடுதலான பாதுகாப்பு தவெகவினருக்கு வழங்கப்பட்டது;

## திருச்சி மாநகராட்சியில் தேர்தலுக்கு முன்பாக அனைத்து சாலை பணிகளும் முடிக்கப்படும் 154 கோடியில் சாலை சாக்கடை பணிகள் மேயர் அன்பழகன் தகவல் மேயருடன் திமுக கவுன்சிலர் வாக்குவாதத்தால் பரபரப்பு

திருச்சி, அக்.01-

திருச்சி மாநகராட்சி மாமன்ற கூட்டம் நேற்று மாநகராட்சி கூட்ட அரங்கில் நடந்தது.

மேயர் அன்பழகன் தலைமை தாங்கினார். துணை மேயர் திவ்யா தனக்கோடி, மண்டல குழு தலைவர்கள் மதிவாணன், விஜயலட்சுமி கண்ணன், துர்கா தேவி, ஜெய நிர்மலா, துணை ஆணையர் பாலு

மற்றும் கவுன்சிலர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் துணை ஆணையர் பாலு பேசும்போது,

திருச்சி மாநகராட்சியில் 20 வால் பல்புகள் அனைத்தும் 40 வால்ட் பல்புகளாக மாற்றப்பட்டுள்ளது.

திருச்சி மாநகராட்சியில் ரூபாய் 154 கோடியே 34 லட்சத்துக்கு சாலை மற்றும் கழிவுநீர் வாய்க்கால் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றார்.

கவுன்சிலர் ரமேஷ் (திமுக ) :

நாய் கருத்தடை மையங்களில் எந்தப் பணிகளும் நடக்கவில்லை. நாய் பிடிப்பதை விட்டு விட்டு ஊழியர்கள் ஏ.சி அறையில் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

சுரேஷ் சிபிஐ :

எனது பாடல் சுகாதார அலுவலகம் கட்டப்படவில்லை. சாலைகள் சீர்குலைந்து காணப்படுகின்றன.

மேயர் அன்பழகன் :





இந்த மாதத்தில் சுகாதார அலுவலகம் கட்டி முடிக்கப்படும்.

தமிழகம் முழுவதும் தேர்தலுக்கு முன்பாக சாலைப் பணிகளை முடிக்க முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார் .அந்த வகையில் மாநகராட்சியிலும்

சாலை பணிகள் மேற்கொள்ளப்படும். தேர்தலுக்குப் முன்பாக திருச்சியிலும் அனைத்து சாலைப் பணிகளும் முடிக்கப்படும்.

அரவிந்தன் (அதிமுக ) :

டபிள்யு பி.

ரோடு பகுதியில் வடிகால் பாலம் போடப்படாமல் உள்ளது. அதனை தூர்வார வேண்டும்.

பர்மா பஜாரில் உள்ள 95 தரைக்கடை வியாபாரிகளுக்கு யானை குளத்தில் 95 எண்ணிக்கையில் ஒரே அளவில் கடைகள் அமைத்துக் கொடுப்பதாக. இந்தக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. என்.எஸ்.பி சாலையில் உள்ள தரைக்கடை வியாபாரிகளுக்கு எங்கே இடம் ஒதுக்கப்படும்?

மேயர் அன்பழகன்;

கலந்து பேசி யாருக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் கடைகள் ஒதுக்கப்படும்.

ந..பிரபாகரன் (விடுதலை சிறுத்தைகள் கட்சி) :

காந்தி மார்க்கெட் வாழைக்காய் மண்டி உரிமம் ரத்து செய்யப்பட்ட போதிலும், அங்கு சாலையில் வாழைத் தார்களை குவித்துவைக் கிறார்கள். லாரிகளை நிறுத்துகிறார்கள். இதனால் போக்குவரத்துக்கு பெரும் இடையூறாக உள்ளது. மக்கள் பாதிக்கப் படுகிறார்கள்.

மேயர் அன்பழகன்

அவர்களுக்கு இப்போது இடமில்லாததால் அங்கு செயல்படுகிறார்கள். ஒழுங்குபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

பஞ்சப்பூர் காய்கறி மார்க்கெட் கட்டி முடித்தவுடன் அங்கு செல்வதாக கூறியுள்ளார்கள்.

கோ.கு. அம்பிகாபதி (அதிமுக ) :

திருச்சி புதுக்கோட்டை சாலையில் மொராய்ஸ் சிட்டி பகுதியில் சென்டர் மீடியனில் உள்ள மின்விளக்குகள் எரியவில்லை எனவே சென்டர் மீடியனில் புதிய மின்விளக்குகள் அமைக்க வேண்டும்.

எனது வார்டுக்கு உட்பட்ட செம்பட்டு பகுதியில் ஆக்கிரமிப்பில் இருந்த 18 சென்ட் மயான பூமி தாசில்தார் மூலமாக மீட்கப்பட்டது. இப்போது மீண்டும் அதை ஆக்கிரமிக்க முயற்சிக்கிறார்கள்.

ஆகவே மாநகராட்சி நிதி ஒதுக்கப்பட்டு வேலி அமைத்து அதை மீட்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

காஜாமலை விஜி : (திமுக )

எனது வார்டுக்கு உட்பட்ட பகுதியில் எந்த வேலையும் சரியாக நடக்கவில்லை பல கூட்டங்களில் பேசிய பின்னரும் எனது கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை. மேயருக்கு வானளாவிய அதிகாரம் இருந்தும் அதிகாரிகள் வேலை செய்யாமல் இருக்கிறார்கள். இதை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு சென்றால்இந்த அதிகாரிகள் மாற்றப்படுவார்கள் .

இதனால் மேயருக்கும் காஜாமலை விதிக்கும் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

பைஸ் அகமது; (மமக):

மழைக்காலத்துக்கு முன்பாக தென்னூர் உக்கிர காளியம்மன் கோவில் பகுதி மற்றும் அண்ணாநகர் பகுதியில் மழை நீர் வடிகால்களை தூர்வாரி கல்வெட்டு அமைக்க வேண்டும்.

கவுன்சிலர் நாகராஜ் : (திமுக)

எனது வார்டில் கடந்த ஒரு மாதமாக பாதாள சாக்கடை பணிகள் நடைபெறவில்லை.

பில் வராததால் பணிகள் செய்ய இயலவில்லை என காண்ட்ராக்டர் சொல்கிறார்.

மேயர் அன்பழகன் :

பில் தொகை வந்துவிட்டது.

பணிகள் சுணக்கமில்லாமல் நடக்கும்.

இவ்வாறு விவாதம் நடந்தது.

தொடர்ந்து அனைத்து கவுன்சிலர்களும் தங்களது வார்டு பிரச்சனைகள் குறித்து பேசினார்.முடிவில் மாநகராட்சி கூட்டத்தில் தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.



## காந்தி ஜெயந்தி விழா அன்று கிராம சபை கூட்டம்

சிவகங்கை, அக்.01-

கிராம சபை கூட்டமானது அனைத்து கிராம ஊராட்சிகளிலும் ஒவ்வொரு ஆண்டும் காந்தி ஜெயந்தி விழா அன்று நடப்பது வழக்கம். இந்த ஆண்டு 01.10.2025, 02.10.2025 ஆயுத பூஜை, விஜயதசமி வருவதால் கிராம கூட்டமானது 11.10.2025 சனிக்கிழமை நடைபெறும் என்று அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. மேலும் இவ்வறிக்கையில் அக்டோபர் 11ஆம் தேதி நடைபெறும் கிராம சபை கூட்டத்தில் 7515 கிராம ஊராட்சிகள் பங்கேற்று தங்களது வீடியோ/ஆடியோ பதிவுகளை சபாசார் இணையதளத்தில் பதிவேற்றப்பட வேண்டும் அதற்கான முன்னேற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள். இந்த அறிவிப்பானது சம்பந்தப்பட்ட துறைசார் அலுவலர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது

## IRCTC ஆன்லைன் டிக்கெட் முன்பதிவு விதியில் மாற்றம் - அக்.1 முதல் 15 நிமிடங்களில் டிக்கெட் வாங்க Aadhaar அவசியம்

சென்னை, அக்.01-

இந்திய ரயில்வேக்கள் (IRCTC) அறிவிப்பின்படி, 2025 அக்டோபர் 1 முதல், ஆன்லைனில் “general reserved tickets” முன்பதிவு ஆரம்பித்த முதல் 15 நிமிடங்களில் டிக்கெட்டை வாங்க, Aadhaar சரிபார்ப்பு (அதாவது Aadhaar authentication) செய்யப்பட்ட பயணிகளுக்கு மட்டுமே அனுமதி தரப்படும்.



முன்னதாக இது MFTatkal முன்பதிவுகளுக்கு மட்டுமே பொருந்தியும் இருந்தது.இப்போது அந்தக் கட்டுப்பாடுகள் சாதாரண முன்பதிவு களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளன.

மாற்றங்கள் மற்றும் விதிகள்

- முதல் 15 நிமிடங்கள்: ஆன்லைனில் டிக்கெட் வாங்கும் போது Aadhaar சரிபார்ப்புடன் உள்ள பயணிகள் மட்டுமே முன்பதிவு செய்ய முடியும்.
- 15 நிமிடங்கள் கடந்த பிறகு: சாதாரணமாக அனைத்து பதிவு செய்த பயணிகளும் டிக்கெட் முன்பதிவு செய்யலாம்.
- PRS (Railways' computerized counters): இதில் எந்தவொரு மாற்றமும் இன்றி முன்பதிவு இப்போது போலவே தொடரும்.
- அங்கீகாரம் பெற்ற டிக்கெட்டிங் முகவர்கள் (Authorized ticketing agents): Tatkal முன்பதிவுகளில் உள்ள 10 நிமிட விதி தொடர்ச்சியாக செயல்படும்.

பயணிகள்என்ன செய்ய வேண்டும்?

- இந்த முதல் 15 நிமிடம் வாய்ப்பு பயன்படுத்த, உங்கள் IRCTC கணக்கில் Aadhaar எண்ணை முன் இணைத்து (link) வைக்க வேண்டும்
- IRCTC கணக்கில் உள்ள விவரங்கள் (பெயர், பிறந்த தேதி, இலக்கு ஆகியவை) உங்கள் Aadhaarல் உள்ள விவரங்களுடன் ஒப்புப்போக வேண்டும், இல்லையெனில் சரிபார்ப்பு சிக்கல்கள் எழலாம்.

இணை ஆசிரியர்
பிரதீப் கிருஷ்ணன்

## சின்னாளபட்டி பேரூராட்சிப் பகுதிகளில் தெருநாய்களுக்கு வெறிநாய் கடி தடுப்பூசி போடும்பணி நடைபெற்று வருகிறது: இரண்டு நாட்களில் 70 நாய்களுக்கு தடுப்பூசி போடபட்டது

சின்னாளபட்டி, அக்.01-

சின்னாளபட்டி பேரூராட்சிப் பகுதிகளில் தெருநாய்களுக்கு வெறிநாய் கடி தடுப்பூசி போடும்பணி நடைபெற்று வருகிறது. செயல் அலுவலர் இளவரசி மற்றும் சுகாதார அலுவலர் மேற்பார்வையில் இரண்டு நாட்களில் 70 நாய்களுக்கு தடுப்பூசி போடபட்டது.

திண்டுக்கல் மாவட்டம் சின்னாளபட்டியில் 18வார்டுகள் உள்ளன. சுமார் 40 ஆயிரம் பொதுமக்கள் வசிக்கின்றனர். குறிப்பாக சின்னாளபட்டியில் வி.எம். எஸ்.காலனி, பூஞ்சோலை, பாரதிநகர், ஜீவாநகர், சின்னாளபட்டி பிரிவுப் பகுதியில் அண்ணா நகர், மேட்டுப்பட்டி மயானத் தெரு, கலைஞர் கருணாநிதி காலனி, பைபாஸ் மற்றும் கீழக்கோட்டை மயானப்பகுதியில் நாய்கள் கூட்டம் அதிகரித்து வருகிறது. இதனால் நாய்கள் அதிகாலையில் உடற்பயிற்சி மற்றும் வேலைக்கு செல்பவரையும் நடந்து செல்வோரையும் விரட்டிச்சென்று கடித்து விடுகின்றன. இதுபோல பள்ளிக்குச் செல்லும்



சிறுகுழந்தைகளையும். மாலை நேரங்களில் சிறப்பு வகுப்புக்காக (டியூசன்) செல்லும் மாணவ, மாணவியர்களை கடித்து விடுவதால் பலர் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தனர்.

சின்னாளபட்டி 10வது வார்டு பொம்மையசாமி கோவில்தெரு, 4வது வார்டு சோமசுந்தரம் காலனி, 5வது வார்டு காமாட்சிநகர் 11வது வார்டு காமராசர் சாலை பகுதியில் நாய்கள் கூட்டம் கூட்டமாக திரிந்து அதிகாலையில் உடற்பயிற்சிக்கு செல்லும் பொதுமக்களை விரட்டிச்சென்று கடித்து விடுகிறது. சின்னாளபட்டியில் சராசரியாக 3 முதல் 5 நபர்களை தெருநாய்கள் கடித்து விடுகிறது. இதனால் அரசு மருத்துவமனைக்கு நாய்க்கடிக்கு ஊசிபோட வரும் நபர்களின் எண்ணிக்கை அதிகரித்து வந்தது. மலேரியா, டெங்கு, வைரஸ் காய்ச்சல் வரிசையில் நாய்க்கடியால் உருவாகும் ரேபீஸ் நோய் பரவாமல் இருக்க பேரூராட்சி நிர்வாகம் அதிரடி நடவடிக்கை எடுத்து வருகிறது. கடந்த இரு நாட்களாக சின்னாளபட்டியில் உள்ள தெரு நாய்களுக்கு ஏஆர்வி எனப்படும் (ஆன்டி ரேபிஸ் வேக்சின்) எனப்படும் வெறிநாய்கடி தடுப்பூசிகளை நாய்களுக்கு போட்டு வருகிறது. சின்னாளபட்டி பேரூராட்சி செயல் அலுவலர் இளவரசி தலைமையில் சுகாதார அலுவலர் மணிகண்டன் மேற்பார்வையில் அம்பாத்துரை கால்நடை மருத்துவர் மஹாலெட்சுமி தெருநாய்களுக்கு தடுப்பூசிகளை போட்டார். கடந்த இரு நாட்களகாக 70 தெருநாய்களுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளன. இதுகுறித்து சின்னாளபட்டி பேரூராட்சி செயல் அலுவலர் இளவரசி கூறுகையில் மாவட்ட ஆட்சியர் மற்றும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் உத்தரவுப்படி சின்னாளபட்டி சிறப்புநிலை பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சுற்றித்திரியும் தெருநாய்களுக்கு தடுப்பூசி போடும்பணி நடைபெற்று வருகிறது. சுமார் 150 நாய்கள் இருக்கின்றன. இதுவரை 70 நாய்களுக்கு தடுப்பூசி போட்டுள்ளோம். விரைவில் அனைத்து நாய்களுக்கும் தடுப்பூசி போடப்படும் என்றார். கடந்த மாதம் வீடுகளில் வளர்க்கப்படும் நாய்கள் 23 நாய்களுக்கு தடுப்பூசி போட்டுள்ளோம் என்றதுடன் பொதுமக்கள் நலன் கருதி பெருகி வரும் நாய் தொல்லையும் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறோம் என்றார்.





## அலங்காநல்லூரில் பசுமை உழவர் உற்பத்தியாளர் இரண்டாம் ஆண்டு பொது குழு கூட்டம்

அலங்காநல்லூர், அக்.01-

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் சமுதாய கூடத்தில் பசுமை உழவர் உற்பத்தியாளர் இரண்டாம் ஆண்டு பொது குழு கூட்டம் நடந்தது. இந்த கூட்டத்திற்கு இயக்குனர் தலைவர் தனிராஜன், வரவேற்றார். மதுரை வேளாண்மை துணை இயக்குனர் வேளாண் வணிகம் மெர்சிஜெயராணி, தலைமை தாங்கினார். வேளாண்மை உதவி இயக்குனர் தெய்வேந்திரன், தோட் டக்கலை அலுவலர் ஜோதிலட்சுமி, தங்கராஜ், அனுமதி பாண்டி, தேன் மொழி, மயில்வாகனன், ஆறுமுகம், வெள்ளையன், சாக்ரடிஸ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வேளாண்மை அலுவலர்கள் சித்தார்த், மீனா,ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். வேளாண் அலுவலர் ராஜ் குமார், சண்முகசுந்தர பாண்டி, முருகானந்தவேல், அருள்குமார், முருகன், ஆகியோர் கலந்துகொண்டு விவசாயிகளுக்கு ஆலோசனைகளை வழங்கினர். இதில் ஏராளமான விவசாயிகள், பங்குதாரர்கள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். முதன்மை செயல் அலுவலர் ராஜபாண்டி நன்றி கூறினார்.



# திருச்சி மாநகராட்சிக்கு 50 கோடி ரூபாய் வரி பாக்கி 57 கடைகளுக்கு சீல்

## ரூ.200 கோடி பொருட்கள், பணத்தை வைத்து பூட்டியதாக குற்றச்சாட்டு வியாபாரிகள் திரண்டதால் பரபரப்பு

திருச்சி, அக்.01-

திருச்சி மாநகராட்சிக்கு சொந்தமான, வாடகை செலுத்தாத 57 கடைகளுக்கு மாநகராட்சி அதிகாரிகள் சீல் வைத்தனர்.அப்போது வியாபாரிகள் திரண்டதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. வியாபாரிகள் கூறும்போது 200 கோடி மதிப்புள்ள பொருட்கள் மற்றும் வியாபாரம் நடந்த பணம் ஆகியவை கடைகளுக்குள் இருப்பதாக தெரிவித்தனர்.

திருச்சி மாநகராட்சியில் தற்போது 65 வார்டுகள் உள்ளன.

திருச்சி மாநகராட்சிக்கு சத்திரம் பேருந்து நிலையம், ஜங்ஷன் பேரு ந்து நிலையம் உள்ளிட்ட பல்வேறு இடங் களில் கடைகள் உள்ளன. அவை வாடகைக்கு விடப்பட்டு அதன் மூலம் வருவாய் ஈட்டி வருகிறது.

இந்த சூழலில் திருச்சி மாநகராட்சிக்கு சொந்தமான மரக்கடை, மேல புலிவார்டு சாலை, ராஜா பார்க் உள்ளிட்ட பகுதிகளில் 57 கடைகள் கடந்த இரண்டு வருடமாக வாடகை செலுத்தப்படாமல் உள்ளதாக கூறப்படுகிறது.

மாநகராட்சி அதிகாரிகள் வாடகைதாரர்களுக்கு பலமுறை அறிவுறுத்தியும் 50 கோடி ரூபாய் வாடகை தொகை நிலுவையில் உள்ளது.

எனவே வாடகை செலுத்தாத 57 கடைக்கு சீல் வைக்கும் பணி நேற்று நடைபெற்றது.

கோட்டை காவல்துறை துணை ஆணையர் சிபின் தலைமையில் 100க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். அப்போது திருச்சி காந்தி மார்க்கெட் அருகே உள்ள எம்ஜிஆர் சிலை முதல் இப்ராஹிம் பார்க் வரை மேலப்புலிவார்டு ரோட்டில் மேற்கு பகுதியில் உள்ள மாநகராட்சி கடைகளை சேர்ந்த வியாபாரிகள் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு திருச்சி மாவட்ட தலைவர் ஸ்ரீதர் தலைமையில் நூற்றுக்கும் மேற்பட்ட வியாபாரிகள் திரண்டனர்.அப்போது போலீசார், அதிகாரிகளுக் கும் வியாபாரிகளுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

இதனால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. அப்போது தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு திருச்சி மாவட்ட தலைவர் ஸ்ரீதர் கூறுகை யில்,மாநகராட்சி திடீரென எந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.இந்த கடைகள் பூட்டப்பட்டதன் மூலம் சுமார் 200 கோடி ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் மற்றும் விற்பனை செய்யப்பட்ட பணம்,ஜிஎஸ்டி உள்ளிட்ட ஆவணங்கள், கணினிகள் என அனைத்து பொருள்களும் உள்ளே உள்ளது.இப்படி சீல் வைத்தால் வியாபாரிகளின் நிலைமை என்னவாகும். நீதிமன்ற விடுமுறையை பயன்படுத்தி இந்த நடவடிக்கையை மாநகராட்சி எடுத்துள்ளது. இதனால் வியாபாரிகள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். வியாபாரிகள் நலன் கருதி மாநகராட்சி பரிசீலனை செய்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்தார். இந்நிலையில் வாடகை கட்டியுள்ளதாக ஒரு சிலர் கூறியதையடுத்து தற்போது மாநகராட்சி ஆணையர், டீஆர்ஓ, ஆர்டீஓ மற்றும் கடை வாடகைதாரர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். மேலும் திரண்ட வியாபா ரிகளிடமும் பேச்சுவார்த்தை நடத்தினர். இதனால் அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

# தொடர் விடுமுறையை முன்னிட்டு அதிகப்படியான கட்டணம் வசூலித்தால் நடவடிக்கை

## ஆம்னி பேருந்து உரிமையாளர்களுக்கு போக்குவரத்து துறை எச்சரிக்கை

சென்னை, அக்.01-

தொடர் விடுமுறையை முன்னிட்டு அதிகப்படியான கட்டணம் வசூலித்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என ஆம்னி பேருந்து உரிமையாளர்களுக்கு போக்குவரத்து துறை எச்சரிக்கை விடுத்துள்ளது. இது குறித்து வெளி யிடப்பட்டுள்ள செய்தியில், ஆயுதபூஜை, விஜயதசமி மற்றும் தொடர் வார விடுமுறையை முன்னிட்டு (01.10.2025 முதல் 05.10.2025 வரை) பொதுமக்கள் வெளியூர் பயணம் மேற்கொள்வதைப் பயன்படுத்தி தனியார் ஆம்னி பேருந்துகள் அதிகப்படியான கட்டணம் வசூல் செய்தால் அதனைத் தடுக்க தமிழ்நாடு முழுவதும் வட்டாரப்போக்குவரத்து அலுவலர்கள், மோட்டார் வாகன ஆய்வாளர்கள் மற்றும் போக்குவரத்து சோதனைச்சாவடி ஆய்வாளர்கள் ஆகியோரைக் கொண்டு சிறப்புக்குழு அமைக்கப்பட்டு அதிகப்படியான கட்டணம் வசூல் செய்யும் மற்றும் அனுமதிக்குப்புறம்பாக இயங்கும் ஆம்னி பேருந்துகளை தீவிரமாக சோதனை செய்து அபராதம் விதித்தும், வாகனங்களை சிறைபிடித்தும் வரி வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# டெட் (TET) விவகாரத்தில் நல்ல தீர்ப்பு வரும் என்ற நம்பிக்கை எங்களுக்கு உள்ளது: தமிழக அரசு சார்பாக மறு ஆய்வு மனுவை தாக்கல் செய்துள்ளோம்

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேட்டி

திருச்சி, அக்.01-

திருச்சி தெற்கு மாவட்ட திமுக அலுவலகத்தில் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி நேற்று நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.அப்போது அவர் கூறியதாவது:

செப்டம்பர் 1ந் தேதி மிகப்பெரிய தீர்ப்பு டெட் தேர்ச்சி என்பது மிக அவசியம் என்று வந்தது. இது அனைத்து ஆசிரியர்களுக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. அப்போது அனைத்து ஆசிரியர் சங்கங்களையும் அழைத்து இது குறித்து கருத்து கேட்கப்பட்டது. அரசு சார்பில் இது குறித்து சீராய்வு மனு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இரண்டு ஆண்டுகளுக்குள் ஆசிரியர் தகுதித் தேர்வில் கட்டாயம் தேர்ச்சி பெற வேண்டும் என்ற உத்தரவினை தொடர்ந்து மாணவர்களின் எதிர்கா லத்தை பாதுகாக்கவும், பள்ளி கல்வி முறை சீர்குலைவதை தடுக்கவும் உச்ச நீதிமன்றத்தில் பள்ளி கல்வித்துறை தமிழக அரசு சார்பாக மறு ஆய்வு மனுவை நேற்று மாலை தாக்கல் செய்துள்ளோம். இது ஆசிரியர்களை பாதுகாப்பது ஒரு புறம் இருந்தாலும், லட்சக்க ணக்கான மாணவர்களின் கல்வியில் எந்த தடையும் ஏற்படாமல் பாதுகாப்ப தற்காகவும் காரணம் கூறி இது தாக்கல் செய்யப்ப ட்டுள்ளது.

ஆசிரியர்கள் டெட்டுக்கு தயாராவார்களா? அல்லது மாணவர்களுக்கு பாடம் கற்பிப்பதில் கவனம் செலுத்துவார்களா? என்ற மனநிலை உள்ளதை நாங்கள் எடுத்துரை த்துள்ளோம்.

நல்ல தீர்ப்பு வரும் என்ற நம்பிக்கை எங்களுக்கு உள்ளது . அரசு உங்கள் பக்கம் நிற்கும் .நீங்கள் கல்வி பணியாற்றுங்கள் .உங்கள் பாதுகாப்புக்கு என்னென்ன செய்ய வேண்டுமோ, அதை நாங்கள் செய்வோம் ஒற்றுமை மிக முக்கியம். ஒரு சிலர் பதவி உயர்வு சார்ந்த கோரிக்கைகளை வைத்து வருகிறார்கள். ஒரு சிலர் வாழ்வாதாரமே போகக்கூடிய நிலை இந்த டெட் தீர்ப்பில் உள்ளது. டெட் (TET) தீர்ப்பில் முதலில் ஆசிரியர்களை காப்பாற்றுவோம். அதன் பிறகு இதில் உள்ள சிக்கல்களை முதலமை ச்சருடன் கலந்து பேசி சரி செய்வோம்.

அன்புமணி ராமதாசிற்கு நேற்றே நான் பதில் கூறி விட்டேன். உணர்ச்சியற்ற




இது போல் சிலர் இருக்கும் காலகட்டத்தில் நாங்களும் பொது வாழ்வில் இருக்கிறோம் . மக்கள் நலன் சார்ந்து எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல் நாங்களும் இருக்கின்றோம்.

கரூர் சம்பவத்தில் நாங்கள் உடனடியாக சென்றதை பற்றி சிலர் தவறாக பேசுவது மிகவும் கஷ்டமாக உள்ளது.

தமிழக அரசு சார்பில் ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆணையத்தில் அனைவரும் அவரவருடைய கருத்துக்களை கூறுவர் .நான் நாகப்பட்டினத்தில் இருந்து வந்து கொண்டிருக்கும் பொழுது எனக்கு செய்தி வந்தது. இரவு 10 மணிக்கு நான் கரூர் சென்றேன். நம் கண் முன்னாடியே பிணவறை முன்பு பள்ளி மாணவர்கள் செத்து ஸ்ட்ரக்சரில் தூக்கி வரும் பொழுது எந்த மனிதனாக இருந்தாலும், எந்த தலைவனாக இருந்தாலும் இறப்பின் பொழுது மன வேதனை இருக்கத்தான் செய்யும்.

அரசாங்கம் அன்பு கரங்கள் திட்டத்தில் அயல் நாட்டிற்கு வேலை செல்வது வரை கல்வித் துறையில் பல திட்டங்களை கொண்டு வருகிறோம். நீங்கள் எங்களுக்குத் தான் ஆதரவு தெரிவிக்க வேண்டும் என்று கூறவில்லை, அறிவு சார்ந்த கருத்துக்களை பெற்று யாருக்கு வேண்டுமானாலும் ஆதரவு தெரிவியுங்கள். படிக்க வேண்டிய வயதில் படியுங்கள். அதில் கவனம் செலுத்துங்கள் உங்களை நம்பி தான் வீடும், அரசும் உள்ளது. உங்களுக்கு பிடித்த தலைவர்கள் பின்னால் நீங்கள் செல்லுங்கள். நாங்கள் வேண்டாம் என்று சொல்லவில்லை. உங்களது உயிர் மிக முக்கியம் .

கூட்ட நெரிசலில் சிக்கி கும்பமேளா மற்றும் பெங்களூர் ஐ.பி.எல் ஆகிய வற்றில் உயிரிழப்புகள் நடந்த போது அந்த அரசாங்கம் காவல்துறை அதிகாரிகள் மேல் நடவடிக்கை எடுத்தது. ஆனால் தமிழக அரசு த.வெ.க நிர்வாகிகளை கைது செய்துள்ளது . அரசு அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கவி ல்லையே ஏன்..., முன்னாள் நீதி அரசர் தலைமையில் ஆணையம் அமைக்க ப்பட்டுள்ளது. நான் எந்த கருத்து சொன்னாலும் சரி இருக்காது. அவர் உடன டியாக களத்தில் சென்று அவர் கண்டுபிடித்து யார் மீது தவறு என்று கூறினாலும் அது தவறுதான். தமிழக வெற்றி கழகத்தினர் கூட்டத்தை ஒருங்கிணைப்பு செய்வதில் தவற விட்டுவிட்டனர். அனைவருக்கும் மனிதாபம் என்று ஒன்று உள்ளது .உயிரிழப்புகளில் அவர்க ளுக்கும் மனவேதனை இருக்கும். அந்த விதத்தில் இது சார்ந்து ஆணையம் சார்பில் ஒரு நல்ல அறிக்கை வரும் பொழுது அது பற்றி பேசலாம்.

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி கூறினார்.



## தங்கம் வெள்ளி விலை நிலவரம்

**தங்கம் - 10840 வெள்ளி - 161**

ARATTAI APP | WHATSAPP

Arattai | WhatsApp

# வாட்ஸ் அப்" "டெலிகிராம் செய்திகளுக்கு மாற்றாக..... சுதேசிய தயாரிப்பான...."அரட்டை"

சென்னை, அக்.01-

சென்னையை தலைமை இடமாகக் கொண்டு இயங்கிக் கொண்டிருக்கும்“”ஸோகோ” நிறுவனம் உருவாக்கிய “அரட்டை” செயலி கடந்த மூன்று நாள்களாக இந்திய மக்கள் இடையை நல்ல வரவேற்பைப் பெற்றிருக்கிறது. உள்நாட்டில் உருவாக்கப்பட்ட இந்தச் செயலியில் பல மேம்பாடுகளைச் செய்ய இருப்பதாகவும் அரட்டை செயலியின் நிறுவனர் ஸ்ரீதர் வேம்பு தெரிவித்து இருக்கிறார்.




# அதிகரிக்கும் ஆணவ படுகொலைகள் நிரந்தர தீர்வு என்ன? சிறப்பு கருத்தரங்கம் தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கம்

திருப்பூர், அக்.01-

பி சீனிவாசராவ் அவர்களின் 64 ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கம் திருப்பூர் மாவட்ட குழுவின் சார்பில், அதிகரிக்கும் ஆணவப் படுகொலைகள் நிரந்தர தீர்வு என்ன ? என்ற தலைப்பின் கீழ் சிறப்பு கருத்தரங்கம் தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின்* திருப்பூர் மாவட்ட செயலாளர் வி . பி . பழனிசாமி * தலைமையில் நடைபெற்றது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில நிர்வாக குழு உறுப்பினர் எம்.ரவி கருத்தரங்கத்தை துவக்கி வைத்து பேசினார்.

இக்கருத்தரங்கத்திற்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில நிர்வாக குழு உறுப்பினர் த.லெனின்* கலந்துகொண்டு அதிகரிக்கும் ஆணவ படுகொலைகளை தடுத்து நிறுத்த தனிச்சட்டம் இயற்றுவதே சரியான தீர்வு என கருத்துரை வழங்கினார்.

கருத்தரங்கில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்து சங்கத்தின் மாவட்ட துணை செயலாளர் வி கோபால் நன்றியுரை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் திருப்பூர் புறநகர் மாவட்ட செயலாளர் கே.எம் .இசாக், மாநகர் மாவட்ட செயலாளர் ஆர்.செந்தில்குமார், ஏஐடியூசி மாவட்ட தலைவர் எம்.மோகன் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்டோர் பங்கேற்றார்கள்.

# காந்திகிராமம் பல்கலைக் கழகத்தில் 6வது மாநில அளவிலான கல்லூரிகளுக்கு இடையேயான கபடி போட்டி : முதல் பரிசை கரூர் சேரன் கல்லூரி பெற்றது

## பல்கலைக் துணை வேந்தர் எம்.பஞ்சநதம் கபடி போட்டியை துவக்கி வைத்தார்

சின்னாபட்டி, செப்.30-

காந்திகிராமம் பல்க லைக் கழகத்தில் 6வது மாநில அளவிலான கல்லூரிகளுக்கு இடையேயான கபடி போட்டி நடைபெற்றது, பல்கலைக் துணை வேந்தர் எம்.பஞ் சநதம் கபடி போட்டியை துவக்கி வைத்தார் முதல் பரிசை கரூர் சேரன் கல்லூரி பெற்றது.




காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தில் 26.09.2025 மற்றும் 27.09.2025 ஆகிய தேதிகளில் 6வது மாநில அளவிலான கல்லூரிகளுக்கு இடையே யான கபடி போட்டியை நடைபெற்றது காந் திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலை க்கழகத் துணைவேந்தர் டாக்டர் என். பஞ்சநதம் போட்டிகளை துவக்கி வைத்து விளையாட்டு வீரர்களை வாழ்த்தினார். போட்டிகளில்

காந்திகிராம கிராமப்புற நிறுவனம், காந்திகிராமம். கரூர். ஸ்ரீ அமராவதி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருச்சி, தனலட்சுமி கல்லூரி, ஆத்தூர். கூட்டுறவு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வத்தலக்குண்டு. கேபி தேசிய கல்லூரி, திண்டுக்கல் ஆர்.வி.எஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கன்னிவாடி. அரசு கலைக் கல்லூரி, கரூர். சேரன் கல்லூரி, தேனி. பாரத் நிகேதன் கல்லூரி, விருதுநகர் அரசு கல்லூரி, கோயம்புத்தூர். விவேகானந்தா பல்கலை க்கழகம், திண்டுக்கல். ஆர்.வி.எஸ். பொறியியல் கல்லூரி, திண்டுக்கல். எஸ்.எஸ்.எம். திண்டுக்கல். வேடசந்தூர். அரசு கலைக் கல்லூரி, தேவதான பட்டி. மேரி மாதா கல்லூரி, திண்டுக்கல் ஸ்ரீவீ கல்லூரி, காந்திகிராமம் கிராமப்புற நிறுவனம் காந்திகிராமம். ஆகிய கல்லூரிகள் உட்பட 20 கல்லூரிகள் கலந்து கொண்டன. நாக்அவுட் மற்றும் லீக் அடிப்படையில் நடத்தப்பட்ட போட்டிகள். நான்கு அணிகள் லீக் கட்டத்தில் நுழைந்து ரொக்கப் பரிசுகளுடன் கோப்பையை வென்றன. முதல் பரிசு தொகை ரூ.15,000 த்தை சேரன் கல்லூரி, கரூர் அணியும் இரண்டாம் பரிசு முதல் பரிசு தொகை ரூ.10,000 த்தை ஆர்.எம். விவேகானந்தா பல்கலைக்கழகமும்,

மூன்றாம் பரிசு தொகை ரூ. 6 ஆயிரத்தை காந்தி கிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகமும், நான்காம் பரிசுத் தொகை ரூ. 4ஆயிரத்தை திண்டுக்கல் ஸ்ரீவீ கல்லூரியும் பெற்றன. காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகப் போட் டிகள் மற்றும் விளையாட்டுக் குழுவின் தலைவர் டாக்டர் ஏ. பாலகிருஷ்ணன் நிறைவு விழாவிற்கு தலைமை தாங்கி கோப்பைகள் மற்றும் ரொக்கப் பரிசு களை வழங்கினார். ஆண்களுக்கான 6வது மாநில அளவிலான கல்லூரிகளுக்கு இடை யேயான கபடி போட்டிகளை காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழக உடற்கல்வி இயக்குநர் டாக்டர் சி.சுகுமார் மற்றும் உடற்கல்வி மற்றும் யோகா மைய ஊழியர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.




# பண்ணை கிணறு, தொட்டம்பட்டி ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் முகாம்

திருப்பூர், அக்.01-

திருப்பூர் மாவட்டம் குடிமங்கலம் ஒன்றியத் துக்கு உட்பட்ட பண்ணை க்கிணறு தொட்டம்பட்டி ஆகிய ஊராட்சி மக்கள் பயன்பெறும் வகையில் உங்களுடன் ஸ்டாலின் முகாம் பொட்டயம் பாளையம் ஊராட்சி துவக்கப் பள்ளியில் நடைபெற்றது .திருப்பூர் தெற்கு மாவட்ட கழக செயலாளர் இலா பத்மநாதன் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் அடி வள்ளி முரளி பொதுமக்கள் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டனர். இந்நிகழ்ச்சியில் அவைத் தலைவர் ஜெயபால் ,தலைமை செயற்குழு உறுப்பினர் சியாம் பிரசாத், பொருளாளர் முருகானந்தம், தொட்டம் பட்டி ஊராட்சி முன்னாள் தலைவர் தினேஷ் குமார், இளைஞர் அணி அமைப்பாளர் பிரகாஷ் ,மற்றும் பண்ணைக்கிணறு, தொட்டம்பட்டி ஊராட்சி கழக நிர்வாகிகள் மற்றும் அனைத்து அரசு துறை அதிகாரிகள் ஊராட்சி செயலாளர் முகாம் ஏற்பாடுகளை செய்தார்கள்.



# குறிஞ்சி சுகம் வட்டார களஞ்சியம் தங்க மயில் ஜுவல்லரி மதுரை அரவிந்த் கண் மருத்துவமனை நடத்திய இலவச மருத்துவ முகாம்

அலங்காநல்லூர், அக்.01-

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே உள்ள அ.புதுப்பட்டி ஸ்ரீ ராமகிருஷ்ணா மண்டபத்தில் குறிஞ்சி சுகம் வட்டார களஞ்சியம் தங்கமயில் ஜுவல்லரி மற்றும் மதுரை அரவிந்த் கண் மருத்துவமனை மாவட்டபார்வை இழப்பு தடுப்புச் சங்கம் இணைந்து 30.09.2025. அன்று இலவச கண் பரிசோதனை முகாம் நடைபெற்றது இந்த முகாமை தங்கமயில் ஜுவல்லரி முதல்நிலை மேலாளர் செல்வம்,குத்துவிளக்கு ஏற்றி துவக்கி வைத்தார். அரவிந்த் கண் மருத்துவமனையின்முகாம் ஒருங்கிணைப்பாளர் முருகேசன் வழி நடத்தினார். மதுரை தானம் அறக்கட்டளையின் கிராமப்புற மண்டல ஒருங்கிணைப்பாளர் முத்தையா,ஒருங்கிணைப்பு செய்திருந்தார்.

இம்முகாமுக்கான ஏற்பாடுகளை வட்டாரக் களஞ்சிய பணியாளர்கள் மற்றும் தலைவிகள் செய்திருந்தனர்.

இம்முகாமில் கலந்து கொண்டு சிறப்பாக நடத்திய அனைவருக்கும் வட்டார ஒருங்கிணைப்பாளர் வள்ளி, நன்றி தெரிவித்தார்.முகாமில் 221 பேர் கலந்து கொண்டனர். 32 பேர்கண் அறுவை சிகிச்சைக்கான அரவிந்த் கண் மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். 28பெயர்களுக்கு கண்ணாடி வழங்கப்பட்டது மேலும் கண்ணில் அதிக பாதிப்பு உள்ள நபர்கள் 6 நபர்களுக்கு அரவிந்த் கண் மருத்துவமனைக்கு பரிந்துரை செய்யப்பட்டனர்.

# கரூர் உயிரிழப்பு சம்பவம்: எம்.ஆர். விஜயபாஸ்கர் எழுப்பும் சந்தேகங்கள்

கரூர், அக்.01-

கரூரில் தவெக பிரச்சாரக் கூட்ட நெரிசல் உயிரிழப்பு விவகாரத்தில் ஒரு நபர் ஆணையம் நேர்மையாக விசாரணையை மேற்கொள்வதாக தெரியவில்லை என அதிமுக முன்னாள் அமைச்சர் எம்.ஆர். விஜயபாஸ்கர் தெரிவித்துள்ளார்.



கரூரில் நேற்று அவர் செய்தியாளர்களிடம் கூறியது: தவெக பிரச்சார கூட்டத் துக்கு காவல் துறை போதிய பாதுகாப்பு வழங்கி இருக்க வேண்டும். பாதுகாப்புக்கு கட்டுப்பாடுகள் விதித்திருந்தால் அவர்கள் அதை கடைபிடித்து இருக்கவேண்டும். கடைபிடிக்க முடியாத கட்டுப்பாடுகள் இருந்தால், அவர்கள் நீதிமன்றத்துக்கு சென்றிருக்கலாம்.

இதனால், அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டு இருக்கும். கூட்டத்துக்கு அனுமதி தரும்போது ஆம்புலன்ஸ் செல்ல வழியிருக்கிறதா என பார்க்க வேண்டும். விஜய் பேசும்போது விளக்குகள் அணைந்தன, செருப்புகள் வீசப்பட்டன. ஆளில்லாத ஆம்புலன்ஸ்கள் வந்தன. இரவோடு இரவாக பிரேதப் பரிசோதனை செய்யப்படுகிறது.

உயிரிழந்தவர்களின் உடல்களை எடுத்து செல்ல 40 ஆம்புலன்ஸ்கள் தயார் செய்து, திமுக மருத்துவர் அணி என ஸ்டிக்கர் ஒட்டியுள்ளனர். கள்ளக் குறிச்சியில் கள்ளச்சாராய மரணம் ஏற்பட்டபோது, அங்கு செல்லாத முதல்வர், இரவோடு இரவாக இங்கு வந்து அஞ்சலி செலுத்துகிறார்.

இந்த சம்பவம் தொடர்பாக ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில் விசாரணை நடைபெற்று வருகிறது. இன்று(நேற்று) ஆணையத் தலைவர் விசாரணை நடத்தியபோது, அவரிடம் புகார் தெரிவித்தவர்களை காவலர்கள் தடுத்து நிறுத்தும் வகையில் நடந்து கொண்டனர். இதனால், ஒரு நபர் ஆணையம் நேர்மையாக விசாரணை மேற்கொள்வதாக தெரியவில்லை. எனவே, சிபிஐ விசாரணை வேண்டும் என்றார்.



# உலகின் மிக உயரமான பாலம் சீனாவில் திறப்பு: 2 மணி நேரப் பயணம் 2 நிமிடத்தில் நிறைவடைகிறது

குய்சோ, அக்.01-

உலகின் மிக உயரமான பாலம் சீன நாட்டில் திறக்கப்பட்டுள்ளது. இதனால் இதுவரை 2 மணி நேரமாக இருந்த பயணம் வெறும் 2 நிமிடங்களாக குறைந்துள்ளது. சீனாவின் குய்சோ மாகாணத்தில் அமைக்கப்பட்டுள்ள பாலம் நேற்று அதிகாரப்பூர்வமாக திறக்கப்பட்டுள்ளது. இந்தப் பாலத்துக்கு ஹுவாஜியாங் கிராண்ட் கன்யான் பாலம் என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது. தரை மட்டத்திலிருந்து 625 மீட்டர் உயரத்தில் இந்தப் பாலம் அமைந்துள்ளது.

இரு மலைகளை இணைக்கும் விதமாக இந்தப் பாலம் மிகவும் அழகுடனும், சிறப்பாகவும் அமைந்துள்ளது. இதுவரை இப்பகுதியைக் கடக்க 2 மணி நேரம் எடுத்துக்கொண்ட நிலையில் தற்போது பாலத்தின் உதவியால் இரண்டே நிமிடத்தில் இப்பகுதியைக் கடந்து விட முடியும்.

இதற்கு முன்பு பெய்பான்ஜியாங் பகுதியில் தரைமட்டத்திலிருந்து 565 மீட்டர் உயரத்தில் கட்டப்பட்டு இருந்த பாலமே உலகின் மிக உயரமான பாலமாக இருந்தது. தற்போது இந்த ஹுவாஜியாங் கிராண்ட் கன்யான் பாலம் 625 மீட்டர் உயரத்தில் அமைக்கப்பட்டு அந்த சாதனை முறியடிக்கப்பட்டுள்ளது. 2,900 மீட்டர் நீளம் கொண்ட இந்தப் பாலம் 3 ஆண்டுகளில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து குய்சோ மாகாண போக்குவரத்து முதலீட்டு குழுமத்தின் திட்ட மேலாளர் வூ ஜாவோமிங் கூறும்போது, "625 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ள இந்தப் பாலம் பொறியியலின் அற்புதமாக திகழ்கிறது.


இந்தப் பாலத்தை பொதுமக்கள் கண்டுகளிக்க வசதியாக 207 மீட்டர் உயரத்தில் லிப்ட் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் பாலத்தையொட்டி உணவகங்கள், பாலத்தை பொதுமக்கள் கண்டுகளிக்க பிளாட்பாரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இது மிக விரைவில் பிரபலமான சுற்றுலாத் தலமாக மாறி சுற்றுலாப் பயணிகளை வெகுவாக ஈர்க்கும்'' என்றார்.

# டிஎன்பிஎஸ்சி குரூப் 2 முதல் நிலைத் தேர்வு இன்ப அதிர்ச்சி தந்த எளிய வினாக்கள்

எப்போதும் போல டிஎன்பிஎஸ்சி குரூப் 2 முதல் நிலைத் தேர்வு, எந்த சச்சரவும் இன்றி சிறப்பாக நடந்து முடிந்துள்ளது. போட்டித் தேர்வுகளைத் திறம்பட நேர்த்தியாக நடத்துவதில் தனக்குள்ள நிபுணத்துவத்தைத் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (டிஎன்பிஎஸ்சி) மீண்டும் ஒருமுறை ஐயத்துக்கு இடமின்றி நிரூபித்து இருக்கிறது. வாழ்த்துக்கள்.

பொதுத்தமிழ் (அ) பொது ஆங்கிலம்; மற்றும் பொது அறிவு / திறனறிவு என்று இரண்டு பகுதிகள். ஒவ்வொன்றிலும், சம மதிப்பெண்கள் கொண்ட நூறு வினாக்கள். தவறான விடைக்கு, மதிப்பெண் குறைப்பு இல்லை. கேள்வித்தாளைப் பார்த்த மாத்திரத்தில் தோன்றுகிற முதல் எண்ணமே 'ஆஹா... எத்தனை எளிதாக இருக்கிறது!'.

ஆனால், கூடவே ஒரு ஆபத்தும் இருக்கிறது. மிக அதிக மதிப்பெண்கள் பெற்றால் மட்டுமே அடுத்த நிலைக்குச் செல்ல முடியும். அதாவது 'கட் ஆப்' மதிப்பெண், வழக்கத்தை விட அதிகமாக இருக்கவே வாய்ப்புகள் அதிகம். தனித்தனியே வினாக்களைப் பார்ப்பதற்கு முன்பு... வினாத்தாளில் அரசியல் கலப்பு அநேகமாக அறவே இல்லை. மாநில அரசுத் திட்டங்கள் தொடர்பான ஓரிரு வினாக்களும் 'ஏற்றுக் கொள்ளத்தக்க' அளவிலேயே இருந்தன.



பொதுத் தமிழ் / பொது ஆங்கிலப் பகுதி பெரும்பாலும் பள்ளிப் பாடத் திட்டத்தை ஒட்டியே இருந்தன. பொதுத்தமிழைப் பொருத்தமட்டில், அகர வரிசைப்படி சொற்கள், சேர்த்து எழுதுதல், பிரித்து எழுதுதல், ஒற்றுப் பிழை சரி செய்தல், பிழையற்ற தொடர் காணுதல், எதிர்ச் சொல் கண்டறிதல் என்று நன்கு பழகிய பாதையிலேயே பயணித்தது.

வணிக மேலாண்மை தொடர்பான ஆங்கிலச் சொற்கள் மற்றும் வெவ்வேறு ஆங்கிலச் சொற்களின் தமிழாக்கம் முற்றிலும் தமிழ் வழியே பயின்ற கிராமத்துத் தேர்வர்களுக்குக் கடினமாக இருந்திருக்கக் கூடும். அந்த வகையில், பொது ஆங்கிலத் தாள், தமிழை விடவும் எளிதாக இருக்க வாய்ப்புகள் அதிகம் என்று தோன்றுகிறது. தவிர்த்து இருக்கலாம்.

அடுத்து பொது அறிவு / திறனறிவு. அறிவியல், கணிதம், வரலாறு பகுதிகளில் 'நேரடிக் கேள்விகள்' மிகுந்து இருந்தன. ஆனால், பொருளாதாரம் மற்றும் சட்டங்கள் தொடர்பான வினாக்கள் சற்றே உயர் தரத்தில் இருந்தன. இவை, சிலருக்கேனும் ஓரளவுக்குக் கடினமாக இருந்திருக்கக் கூடும். குளோரோஃபார்ம், கண்ணீர்ப்புகை, உயிரினங்களில் கார்பன், மின் காந்தங்களில் காந்தப் பண்புகள் ஆகியன அறிவியல் அறிவுக்கு ஏற்ற கேள்விகள்.

கணிதப் பகுதிதான் உண்மையில் இத்தேர்வை மிக எளிமை ஆக்கியுள்ளது. ஆட்கள்வேலை, விகிதாச்சாரம், சராசரி, வட்டி விகிதம் மீதான கேள்விகள், குறிப்பாக கிராமப்புறத் தேர்வர்களுக்கு, மிகுந்த மகிழ்ச்சி, நம்பிக்கை தந்திருக்கும். உ.வே.சா.வின் வாழ்க்கை வரலாற்று நூலின் பெயர், 'வண்ணப் பெட்டிகள்', பெண்களின் பங்களிப்பு பற்றிய பத்தி அதனைத் தொடர்ந்து கேள்விகள், இந்திய தேசிய காங்கிரஸின் நிறுவனர் உள்ளிட்ட பல வினாக்கள் குரூப்2 தேர்வர்களுக்கு மிகச் சாதாரணம்.

அதிலும், கோயம்புத்தூர், மதுரை, நாமக்கல், தஞ்சாவூர் தொடர்பான கேள்வி, அநியாயத்துக்கு எளிதானது! சட்டங்கள், குறிப்பாக இந்திய சாசனம் தொடர்பான வினாக்கள் எல்லாமே, போட்டித் தேர்வுக்கு என்று சற்றேனும் தீவிரத்துடன் தம்மைத் தயார்ப் படுத்திக் கொள்கிற தேர்வர்களுக்கு (மட்டுமே) எளிதாக இருந்திருக்கும்.

அவர்களுக்குமே கூட, முன்னுரிமை அட்டவணை வரிசையில் சரியான வரிசை ஒழுங்கு, அடிப்படைக் கடமையைக் கொண்டு வந்த சாசனத் திருத்தம், தமிழ்நாடு பஞ்சாயத்துகள் சட்டம், வெவ்வேறு ஆணையங்கள் ஏற்படுத்தப்பட்ட ஆண்டு உள்ளிட்டவை சற்றே சவாலாக இருந்திருக்கக் கூடும்.

மகளிர் இட ஒதுக்கீடு மசோதாவின் முக்கிய அம்சங்கள், தேசிய சுகாதார சேவை, தேசிய விவசாய சந்தை, தேசிய திறன் மேம்பாட்டுக் கழகம், தமிழ்நாடு கிராம வாழ்விட மேம்பாடு, 'இடம்பெயர்வு' தொடர்பான வினாக்கள் மூலம், வினாத்தாள் தயாரிப்பில் காட்டப்பட்ட 'அக்கறை' நன்கு வெளிப்பட்டது.

ஏப்ரல் 29 முதல் மே 5 வரை பிறந்தநாள் கொண்டாட்டம், மகளிர் உரிமைத் தொகையின் நோக்கம், 'நம்மைக் காக்கும் 48' திட்டத்தில் கட்டணமில்லா சிகிச்சையின் உச்சவரம்பு, தமிழ்நாட்டில் உள்ள முக்கிய குறிப்பிடத்தக்க எரிசக்தி ஆதாரம் ஆகியன மிகுந்த பொறுப்புணர்வுடன் முன்வைக்கப் பட்டுள்ளன. பாராட்டுக்கள்.

'தூய்மை இந்தியா இயக்கம்' என்று தூய தமிழில் தராமல், 'ஸ்வச் பாரத் மிஷன்' என்று விளிக்க வேண்டிய அவசியம் என்ன..? 'நார்டிக்ஸ்' என்று ஆங்கில மொழியிலேயே ஏன் குறிப்பிட வேண்டும்...? இவையெல்லாம் தவறு இல்லை; ஆனால் தவிர்த்து இருக்கலாம். மற்றபடி, ஒட்டுமொத்தமாய்ப் பார்க்கையில், பெரிய அளவு தவறு (அ) பிழை ஏதும் இல்லை. வினாத்தாள் தயாரிப்பில், நல்ல முன்னேற்றம் நன்கு தெரிகிறது. ஆணையத்துக்கு மனமார்ந்த பாராட்டுக்கள்.

'சுவாரஸ்யமான கேள்வி' என்று முத்திரையிட முடியாது என்றாலும் 'யோசிக்கிறேன்..' என்கிற வகையில் உள்ள ஒரு வினா:

அப்பாவி என்னும் சொல் பிழை எனில், அச்சொல்லின் திருத்தச் சொல்லைக் காண்க:

அ) அடப்பாவி, ஆ) அற்பாவி, இ) அற்ப பாவி, ஈ) அற்ப ஆவி, உ) விடை தெரியவில்லை!



# "காவல்துறையிடம் இருந்தே பெண்களை காப்பாற்ற வேண்டிய நிலை" - இபிஎஸ் வேதனை

சென்னை, அக்.01-

மக்களுக்கு அரணாக இருக்க வேண்டிய காவல்துறையிடம் இருந்தே தங்களை காப்பாற்ற வேண்டிய நிலைக்கு பெண்களைத் தள்ளிய திமுக அரசுக்கு கடும் கண்டனம் தெரிவிப்பதாக அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், "திருவண்ணாமலை ஏந்தல் புறவழிச்சாலை தோப்புப் பகுதியில் கிழக்கு காவல் நிலையக் காவலர்களான சுரேஷ் ராஜ், சுந்தர் ஆகியோர், இளம் பெண்ணை அவர் சகோதரி கண் முன்னரே கொடூரமாக பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கியதாக வரும் செய்தி மிகுந்த அதிர்ச்சி அளிக்கிறது.

பெண்கள் பாதுகாப்பின்மை எனும் அவல நிலையின் கொடூர உச்சம் இது. பெண்கள் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டிய காவலர்களாலேயே, பெண்ணுக்கு நேர்ந்த இக்கொடுமைக்கு முதல்வர் என்ன பதில் வைத்துள்ளார்?.

இந்த வெட்கக்கேடான நிலைக்கு முதல்வரின் திமுக அரசு தலைகுனிய வேண்டும். மக்களுக்கு அரணாக இருக்க வேண்டிய காவல்துறையிடம் இருந்தே தங்களை காப்பாற்ற வேண்டிய நிலைக்கு பெண்களைத் தள்ளிய திமுக அரசுக்கு எனது கடும் கண்டனம்.

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள பெண்ணுக்கு உரிய சிகிச்சை அளிக்கவும், காமுகர்களாக மாறிய காவலர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கவும் திமுக அரசை வலியுறுத்துகிறேன். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## ரயிலே! உன் கதை சொல்வாயா?

தீப்பெட்டிகள் என் முதல் ரயில் - உன்னை
தள்ளிவிட்டு 'ஓடடா' என்றது இன்னும் நினைவுகளில்!!!
கரும்புகை கக்கி நீ 'சுக் சுக்' என்கையில் - என்
குழந்தை மனம் துள்ளியது பெரும் உவகையில்!!!
மரம் செடி பின் தள்ளி நீ விரைகையில் - மற்றுமொரு
ஐன்ஸ்டின் சூத்திரம் விளங்குதோ மிக எளிதில்!
ஒட்டாத தண்டவாளங்களில் நீ
ஒயிலாக நெளியும் வளைவுகளில்
சன்னலோரம் மறையும் கதிரவனில்
சன்னமாக ஒளியெழுப்பி - நீ
சிலிர்ப்பாய் நகரும் பாலங்களில்,
கும்மிருட்டு குகைகளில் - ஊடே
குதிர்க்கும் ஒளிக்கீற்றில்
குறுக்கும் நெடுக்கும் ஓடியோடி - நீ
இணைக்கும் ரயில் நிலையங்களில்
இணையும் ரயில் சினேகங்களில்
எங்கும் எங்கும் உன் சுவாசம்!
எதிலும் பறவுது உன் நேசம்!!!
ரயிலே நீ உன் கதை சொல்வாயா?!!

பேரன்புடன்
ரயில் கவி மாலதி

# மின்வாரிய ஜனதா தொழிலாளர் சங்கம்: தமிழ்நாட்டின் நெற்களஞ்சியம் தஞ்சாவூரில் நடத்திய நிகழ்ச்சிகள் சிறப்பு தொகுப்பு

தஞ்சாவூர், அக்.01-

தஞ்சாவூரில் நடைபெற்ற தொழிற்சங்கத்தின் முக்கிய நிகழ்வுகள், தொழிலாளர் நலனுக்கான உறுதியான நடவடிக்கைகளையும், நினைவேந்தலின் நெகிழ்வையும் ஒருங்கிணைத்த சிறப்பு நாளாக அமைந்தது. சுமார் 250 தொழிலாளர் பிரதிநிதிகள் கலந்து கொண்ட இந்த நிகழ்ச்சி மூன்று முக்கிய அம்சங்களை கொண்டிருந்தது:

முன்னாள் மாநில தலைவர் சோ. இளங்கோ அவர்களின் முதலாம் ஆண்டு நினைவேந்தல்:

கடந்த ஆண்டு நம்மை விட்டு பிரிந்த நமது தொழிற்சங்க முன்னோடிகள் திரு ஜெபமணி ராஜ் திரு பூபதி ஆகியோருக்கும் கரூர் பொதுக்கூட்ட நிகழ்வில் ஏற்பட்ட துயர சம்பவத்தில் உயிரிழந்த அனைவருக்கும் இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

மாநில அளவில் தொழிலாளர் நலனுக்காக தன்னலமின்றி உழைத்த சோ. இளங்கோ அவர்களின் நினைவேந்தல் நிகழ்ச்சி, அவரின் பணிகளை நினைவுகூரும் உரைகளுடன் நடைபெற்றது.

அவரின் வழிகாட்டுதலால் பல்வேறு மாவட்டங்களில் தொழிலாளர் உரிமைகள் வலுப்பெற்றதைக் குறிப்பிட்டும், அவரது அன்பான உபசரிப்பு மற்றும் பண்புடன் பழகும் பண்பு குறித்தும் முன்னாள் மற்றும் இந்நாள் நிர்வாகிகள் பகிர்ந்து கொண்டனர். இறுதியில் அவரது துணைவியார் மணிமேகலை அவர்கள் நினைவு பரிசு வழங்கி கௌரவப்படுத்தப்பட்டார்.

திருச்சி மற்றும் தஞ்சை மண்டல பொதுக்குழு கூட்டம்

இரு முக்கிய மண்டலங்களுக்கான பொதுக்குழு கூட்டம், மாநில துணைப் பொதுச் செயலாளர் திரு சசாங்கன் அவர்கள் பொறுப்பேற்று நடத்திய கூட்டத்தில் உறுப்பினர் சேர்க்கை, தொழிலாளர் பிரச்சனைகள், மற்றும் தீர்வுகள் குறித்து விவாதிக்க அமைந்த ஒரு திறந்த மேடையாக இருந்தது.





மண்டல செயலாளர்கள், உறுப்பினர்கள், மற்றும் புதிய திட்டங்களை முன்வைத்தவர்கள் உரையாற்றினர். திரு வி சிவக்குமார் மண்டல செயலாளர் திருச்சி மண்டலம் அவர்களும் திரு எம் கர்ண ராஜ் செயலாளர் திருச்சி பெருநகர் வட்டம் அவர்களும் திரு டி எடிசன் பொருளாளர் திருச்சி பெருநகர் வட்டம் அவர்களும் மதுரை மண்டல பொறுப்பாளர்களும் இணைந்து பொதுக்குழுவை வழி நடத்தினார்கள்.

பயிற்சி முகாம்கள், நலத்திட்டங்கள், மற்றும் பிரதிநிதி வலுவூட்டல் குறித்து தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

மாநில செயற்குழு கூட்டம் - தீர்மானங்கள் மற்றும் எதிர்கால திட்டங்கள்:

திரு கா ரவி மாநில தலைவர் அவர்கள் தலைமை உரையாற்றினார்.

மாநில அளவில் தொழிற்சங்கத்தின் வளர்ச்சி, அரசியல் நிலைப்பாடுகள், மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து மாநில செயற்குழு கூட்டம் நடைபெற்றது.

மாநில நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், மற்றும் ஆலோசகர் குழுவினர் கலந்து கொண்டு, சம்பள உயர்வு, அரசு கோரிக்கைகள், மற்றும் தொழிலாளர் நலன் குறித்து முக்கிய தீர்மானங்களை எடுத்தனர்.

மாநில பொருளாளர் திரு.லூ. ஜேம்ஸ் கென்னடி தொழிற்சங்கத்தின் வளர்ச்சிக்கு அத்தியாவசியமும் இது போன்ற கூட்டங்களை நடத்துவதற்கும் மிக முக்கியமான தேவை பொருளாதார என்பதை வலியுறுத்தி உறுப்பினர்கள் தரும் சந்தா மூலமாகவும் நன்கொடை மூலமாகவும் மட்டுமே இந்த இயக்கம் நடைபெற முடியும் என்றும் உறுப்பினர்கள் சிரமம் இல்லாமல் சந்தா தொகையை செலுத்துவதற்கு வசதியாக வங்கிகளின் மூலம் தொழிற்சங்க கணக்கிற்கு நேரடியாக செலுத்தும் ஒரு வழிமுறையை அறிமுகப்படுத்தி சிறப்புரையாற்றினார்.

அனைத்து விவாதங்களுக்கும் பதில் உரையாற்றினார் மாநில பொதுச் செயலாளர் திரு சு.பாரி அவர்கள்.

நிகழ்வுகள் அனைத்தையும் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்த மதுரை மண்டல நிர்வாகிகள் அனைவருக்கும் நன்றி தெரிவித்து நிகழ்ச்சி நிறைவுக்கு வந்தது.

இந்த நிகழ்ச்சிகள் மூன்றும் தொழிலாளர் ஒற்றுமையின் முக்கிய அடையாளங்களாக அமைந்தன.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000